# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2024ம் ஆண்டு 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் நாள் திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **28.10.2024** | 1) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டமானது மாநகராட்சிக்கு சொந்தமான 1 முதல் 5ம் வகுப்பு வரையில் பயிலும் 18 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. மேற்படி திட்டத்திற்கான நிதி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. முதலமைச்சரின் காலை உணவு திட்டம் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்ட 8 பள்ளிகளுக்கு 05.09.23 முதல் 22.02.2024 வரை மேற்கொள்ளப்பட்ட உணவு வழங்கிடும் பணியினையும், அரசிடம் இருந்து மேற்படி திட்டத்திற்காக ஓதுக்கீடு செய்து வரப்பெற்ற நிதியினை கொண்டு மேற்படி காலங்களில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 9,64,485.60/- ஆகும்.<br>மேற்படி ஒப்பந்ததாரருக்கு முடிவு பெற்ற 8 பள்ளிகளின் ஒப்பந்தத்தை 23.02.2024 வரை நீட்டிப்பு செய்து வழங்கிடவும்,<br>1 முதல் 5ம் வகுப்பு பயிலும் 18 பள்ளி மாணவ மாணவிகளின் நலன் கருதி No Food Waste நிறுவனத்தின் 23.02.2024 ல் முடிவு பெறும் ஒப்பந்தத்தை மேலும் ஓராண்டு காலம்(23.02.2025) வரை நீட்டிப்பு செய்வதற்கும் ஒரு மாணவருக்கு ரூ.12.65/- வீதம் 2597 மாணவர்களுக்கு ஓராண்டிற்கு பள்ளி செயல்படும் நாட்களுக்கான(210 மட்டும்) உத்தேச செலவினத் தொகை ரூ. 69.00 லட்சத்தினை முதலமைச்சரின் காலை உணவு திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி மற்றும் பின்னேற்பு பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளை அங்கீகரிக்கலாம்.<br>அ1/1618/2023 | 534) அலுவலகக் குறிப்பின்படி<br>1.அனுமதிக்கப்பட்டது<br>2.அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 வெளியிடப்பட்ட அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 12.04.2023, விதி எண்.169 (2), (3)–ல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வரும் நிர்வாகம், திட்டப்பணிகள் முன்னேற்றம், நிதிநிலை, வருவாய், நகர திட்டமிடல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு மற்றும் பொது சுகாதாரம் முதலிய நிர்வாக செயல்பாடுகள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அறியும் வண்ணம் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும் முந்தைய நிதியாண்டு விவரங்களை நிர்வாக அறிக்கையாக தொகுத்து, மாமன்றத்திற்கு பொருள் வைத்து, அதன் விவரத்தினை அறிக்கையாக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி, தூத்துக்குடி மாநகராட்சியின் 2023–24 ஆண்டு நிர்வாக அறிக்கை வெளியிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1/2854/2024 | 535) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப் பட்டது |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் பாதுகாப்பு பணி மேற்கொள்ள மாநகராட்சி மூலம் பாதுகாப்பு பிரிவு 2019 ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டு, பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பாதுகாப்பு பிரிவில் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (CLC) மூலம் முற்றிலும் தற்காலிமாக தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 16 காவலர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மேலும் தினக்கூலி அடிப்படையில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் சில்லரை செலவீன பணியாளர்களுக்கு, தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை கே3/860695/2023 நாள்.26.05.2023–ன்படி, மேற்படி பாதுகாப்பு பணியாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம் நாளொன்றுக்கு ரூ.480/– என நிர்ணயம் செய்யப்பட்டு 26 செப்டம்பர்–2023 முதல் செப்டம்பர் 25, 2024 வரை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.<br>அதனைத் தொடர்ந்து, தினக்கூலி அடிப்படையில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் சில்லரை செலவீன பணியாளர்களுக்கு , தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை கே3/2023559/2024 நாள்.09.07.2024–ன்படி, மேற்படி பாதுகாப்பு பணியாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம் நாளொன்றுக்கு ரூ.521/– என நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>எனவே 2024–25 ஆண்டுக்கான நுகர்வோர் விலை குறியீட்டின் படி, சில்லரை செலவீன பணியாளர்களுக்கு தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில், பாதுகாப்பு காவலர்களுக்கான தினக்கூலி ரூ.521/–நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, இம்மாநகராட்சியில் பாதுகாப்பு | 536) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பிரிவில் பணிபுரியும் 16 காவலர்களுக்கு ஓராண்டுக்கு ஆகும் செலவீனத் தொகை ரூ.30,42,640/—ஐ (16 X 521X 365 = 3042640) 26 செப்டம்பர் 2024 முதல் மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் ஒப்பந்தப்படி, மேற்படி செலவினத்தினை மேற்கொண்டு அதற்கான 2% சேவை கட்டணம் நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) 2024—25 ஆண்டுக்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சில்லரை செலவீன பணியாளர்களுக்கு தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட செயல்முறை ஆணை கே3/2023559/2024 நாள்.09.07.2024 —ன் படி, இம்மாநகராட்சி பாதுகாப்பு பணியாளர்களுக்கான ஊதியம் நாளொன்றுக்கு ரூ521/— நிர்ணயம் செய்து ஓராண்டுக்கான செலவினத் தொகை ரூ.30,42,640/— ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி ஓராண்டு செலவினத் தொகைக்கான 2% சேவை கட்டணம் ரூ.60853/— ஐ நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்கிட மாமன்ற அனுதிக்கலாம்.<br>சி1/2926/2019 | |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் தனியார் ஒப்பந்ததார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் துப்புரவு பணிகள் நடைபெற்று வருவதால் மேற்படி தனியார் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத பணிகளான பூங்கா பராமரிப்பு, சமுதாய மற்றும் பொது கழிப்பறைகள் பராமரிப்பு, MCC மற்றும் RRC பணிகள் போன்ற இதரப்பணிகள், நிரந்தர பணியாளர்கள் மற்றும் CLC பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்போது மழைக்காலம் நெருங்கி வருவதால் மாநகர் பகுதியில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்கள் மற்றும் திறந்த வெளி வாய்க்கால்களில் படிந்துள்ள மண், கழிவுகள் மற்றும் மிதவைகளை அகற்ற மழைநீர் சீராக செல்ல கழிவுகள் அகற்றும் பணி இன்றியமையாததாகும். எனவே மேற்படி பணிக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் Conservancy Cum gardener பணிக்கு 40 (வடக்கு மண்டலம் — 15, கிழக்கு மண்டலம் — 15, மேற்கு மண்டலம் — 10, ஆக மொத்தம் 40 பணியாளர்கள்) பணியாளர்களை கூடுதலாக நியமித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2024—25ம் ஆண்டு செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு நாள் ஒன்றுக்கு ரூ.636/— வீதம் தினக்கூலி அடிப்படையில் 01.10.2024 முதல் தற்காலிகமாக பணியமர்த்தி கொள்வதற்கும், அதற்கான ஊதிய தொகை 01.10.2024 முதல் 31.03.2025 முடிய ரூ.47.23 இலட்சம் 2% சேவை வரியுடன் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 537) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணியாளருக்கு 01.10.2024 முதல் 31.03.2025 முடிய நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கிட அதற்கான செலவுத் தொகை ரூ.47.23 இலட்சம் (2% சேவை வரியுடன் சேர்த்து) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/3317/2024 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சியில் வடக்கு மண்டல பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள OMNI Bus stand பகுதியில் பொதுமக்களின் வசதிக்காக பயணிகள் நிழற்கூடம் மற்றும் 11 கடைகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பணியின் அவசியம் கருதி பணியினை ரூ.38.10 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 24–25 ம் ஆண்டு பணியாக மேற்கொள்ளவும் இப்பொருள் தொடர்பான ஒப்பந்த புள்ளி கோரும் நடவடிக்கைகளுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/ 3990 /2024 | 538) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் நகர மாநாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி கட்டிடத்தின் தரை தளத்தில் கூடுதல் குளிரூட்டிகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பணியின் அவசியம் கருதி பணியினை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 24–25 ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/ 4217 /2024 | 539) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் நகர மாநாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி கட்டிடத்தில் முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் கூடுதல் குளிரூட்டிகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பணியின் அவசியம் கருதி பணியினை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 24–25 ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/ 4216 /2024 | 540) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| | 8) இம்மாநகராட்சியில் பொறியில் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு அலுவலருக்கு ஒப்பந்த அடிப்படையில் 5 எண்ணம் Bollero Jeep வாகனங்களை வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு (09.03.2023 முதல் 08.03.2024 வரையில்) வழங்கிட M/s.Paulkani Travels நிறுவனத்திற்கு, மாமன்ற தீர்மான எண்.313, நாள்.28.04.2023ன் படி மான்றத்தின் அனுமதி பெறப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட 5 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், அதன் ஒப்பந்த காலம் 08.03.2024ல் நிறைவடைந்ததை தொடர்ந்து, மேலும் | 541) அலுவலகக் குறிப்பு<br>1. அனுமதிக்கப் பட்டது<br>2.அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
09.03.2024 முதல் 08.09.2024 வரையிலான 6 மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து மேற்கண்ட 5 வாகனங்களை தொடர்ந்து அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ள, மாமன்ற தீர்மானம் எண்.498, நாள்.30.08.2024ல் M/s.Paulkani Travels,Thoothukudi நிறுவனம், ஒரு வாடகை வாகனத்தின் மாத வாடகை, ரூ.38,850/—வீதம் 5 வாகனங்களுக்கு, ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த அதே வாடகை விலை விகிதத்தில் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.<br>
இவ்வாறான நிலையில், மேற்கண்ட 5 வாகனங்களுக்கு ஒப்பந்த காலம் 08.09.2024 உடன் முடிவுற்றதால், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த அதே விலை விகிதத்தின் அடிப்படையில். மேற்கண்ட M/s.Paulkani Travels,Thoothukudi நிறுவனத்திற்கு, 09.09.2024 முதல் 08.12.2024 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து வேலை உத்திரவு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,82,750/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :<br>
1) அனுமதிக்கலாம்.<br>
2) ஒப்பந்தபுள்ளி கோரும் பட்சத்தில் ஏற்படக்கூடிய கால விரயம் மற்றும் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி M/s.Paulkani Travels,Thoothukudi நிறுவனத்திற்கு, 09.09.2024 முதல் 08.12.2024 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்ததை நீட்டிப்பு செய்திட, மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று செயல்பட்டதை அங்கீகரிக்கலாம்.<br>
இ5/0257/2022
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
9) தூத்துக்குடி மாநகர பகுதியில் தற்போது வரை 152382 வீடுகள் இருந்து வருகின்றன. இதில் தற்போது வரை 90736 குடிநீர் இணைப்புகள் இருந்து வருகின்றன. இதில் தற்போது ஒவ்வொரு குடிநீர் வீட்டு இணைப்பிற்க்கும் ரூ. 10,000 வைப்புத்தொகையாக பெறப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாநகர பகுதியில் புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் பெருமளவில் பெருகி வருகிறது. இதனால் ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்புகளில் ஒரே உள்ள இணைப்பில் அனைத்து குடியிருப்பு வீடுகளுக்கும் சேர்த்து ஒரே குடிநீர் இணைப்பு மட்டுமே பெறப்பட்டு , குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனை சரிசெய்யும் வகையில் குடியிருப்புகள் அடங்கிய வீடுகள் ஒவ்வொன்றிற்கும் வைப்புத்தொகைகள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வகைப்பாடு</th><th>வைப்புத்தொகை<br>( வீடு ஒன்றிற்கு)</th></tr>
<tr><td>1</td><td>இரண்டு முதல் நான்கு வீடுகளை கொண்ட குடியிருப்புகள்</td><td>7,500</td></tr>
</table>
</td>
<td>542) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| 2 | ஐந்து முதல் எட்டு வீடுகளை கொண்ட குடியிருப்புகள் | 6,000 |
| 3 | எட்டுக்கு மேற்பட்ட வீடுகளை கொண்ட குடியிருப்புகள் | 5,000 |

மேற்கண்டவாறு குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத்தொகையை **01.04.2025** முதல் வசூல் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
**இ3/1573/2022**</td><td></td></tr>
<tr><td></td><td>**10) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலம் தெற்கு கடற்கரை சாலை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஏ.சி. சீட் கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.2072/- என நிர்ணயம் செய்யப்பட்டதனை தொடர்ந்து பின் தங்கிய மீனவ மகளிர்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் நோக்கில் சகாய மாதா மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திற்கு மேற்படி கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது..**<br>
அலுவலக குறிப்பு : : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
அ16/4493/2024</td><td>543) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 28-10-2024

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி